தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
*eISSN: 3049-0723 pISSN: 3107-7781*
*Vol. 4 Issue: 02 November 2025*
*DOI: https://doi.org/10.63300/tm040211*

# Azhagar Koil in Literature: A Sacred Tapestry of Verses

**Dr. J. Kaveri,**

Assistant Professor and Head, Postgraduate Department of Tamil, V.V. Vanniaperumal Women's College, Virudhunagar.
Email: kaveri@vvvcollege.org

**Abstract:**

The Azhagar Temple, located in Madurai, southern Tamil Nadu, stands as an important symbol of the spiritual, cultural, and literary heritage of the Tamils. Azhagar, also known as Sundararaja Perumal, is revered as one of the incarnations of Lord Vishnu. From Sangam literature to Bhakti literature, this temple and its deity have been frequently mentioned. Works such as Silappathikaram, Perumpanarruppadai, Nalayira Divya Prabandham, and the hymns of the Alvars repeatedly praise the glory of Azhagar and the significance of the temple. Notably, the Madurai Azhagar festival reflects the cultural unity and devotional spirit of Tamil society.

**Keywords** : *Azhagar Temple - Tamil Literature - Bhakti Tradition - Alvars - Sangam Literature - Madurai - Temple Culture - Devotional Festivals - Cultural Heritage - Divine Representation*

**References:**

1. Āḷvārgal Āyvu Maiyam. Nālāyira Divya Prabandham. [Published by the Research Center for Alwars], Chennai, [n.d.]. (Also listed in Tamil as: ஆழ்வார்கள் ஆய்வு மையம். நாலாயிர திவ்யப்பிரபந்தம்.)
2. Bhārathi Pathippagam. Paripāḍal. Tirumagal Nilayam, [n.d.]. (Also listed as பாரதி பதிப்பகம். பரிபாடல். திருமகள் நிலையம்.)
3. "Kaḷḷaḻakar Paṭṭu Niṟam Palan" [The Significance/Benefit of Kallazhagar's Silk Color]. Puthiya Thalaimurai [புதிய தலைமுறை], [n.d.].
4. "Kaḷḷaḻakar Uḍutti Varum Paṭṭuppuḍavai Niṟattiṉ Arttam" [The Meaning of the Silk Saree Color Worn by Kallazhagar]. One India News, [n.d.].
5. Kesikan, Puliyur (Uraiāciriyar) [Commentator]. Silappatikāram [சிலப்பதிகாரம்]. Shenbaga Pathippagam, Chennai, [n.d.].
6. Kōyil Veḷiyīṭu. Aruḷmiku Kaḷḷaḻakar Tirukkōyil Varalāṟu [History of Arulmigu Kallazhagar Temple]. [Temple Publication], [n.p.], [n.d.].
7. "Maturai Kaḷḷaḻakar Tiruvilā Varalāṟṟut Ciṟappu" [Historical Significance of the Madurai Kallazhagar Festival]. Puthiya Thalaimurai [புதிய தலைமுறை], [n.d.].
8. "Sanga Ilakkiyangalil Tirumāl Vaḻipāḍu" [Worship of Tirumal in Sangam Literature]. Pranav Journals, [n.d.].
9. "Vaikai Āṟu Aḻakar Kōyil Toḍarpu Āyvu" [Study of the Connection between the Vaigai River and Azhagar Temple]. Valai Tamil [வலைத்தமிழ்], [n.d.].

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam

# இலக்கியங்களில் அழகர் கோயில்

**முனைவர் ஜெ. காவேரி,**

முதுகலை தமிழ்த்துறைத் தலைவர் & உதவிப் பேராசிரியர், வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

**ஆய்வுச் சுருக்கம்:**

தென் தமிழகத்தின் மதுரையில் அமைந்துள்ள அழகர் கோயில் தமிழரின் ஆன்மீக, கலாச்சார மற்றும் இலக்கிய பாரம்பரியத்தின் முக்கியச் சின்னமாக திகழ்கிறது. திரு சுந்தரராஜ பெருமாள் என அழைக்கப்படும் அழகர், விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறார். சங்க இலக்கியங்கள் தொடங்கி பக்தி இலக்கியங்கள் வரை பல நூல்களில் இந்தக் கோயிலும் தெய்வமும் குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், பெரும்பாணாற்றுப்படை, நாலாயிர திவ்யப் பிரபந்தம், ஆழ்வார்கள் பாடல்கள் போன்றவற்றில் அழகரின் மகிமையும் கோயிலின் சிறப்பும் பன்முறை புகழப்பட்டுள்ளது. குறிப்பாக, மதுரை ஆழகர் திருவிழா தமிழ் சமூகத்தின் கலாச்சார ஒற்றுமையையும் பக்தி உணர்வையும் பிரதிபலிக்கிறது.

இவ் ஆய்வின் நோக்கம், தமிழ் இலக்கியங்களில் அழகர் கோயிலின் உருவாக்கம், தெய்வீக குணங்கள், கலாச்சார பங்களிப்பு மற்றும் பக்தி மரபில் அதன் இடம் ஆகியவற்றை ஆய்வதற்கு ஆகும். இதன் மூலம், இலக்கியம், மதம் மற்றும் சமூகத்தின் இடையிலான உறவைப் புதிய கோணத்தில் புரிந்து கொள்ள முடிகிறது.

**திறவுச் சொற்கள்** - அழகர் கோயில் - தமிழ் இலக்கியம் - பக்தி மரபு – ஆழ்வார்கள் - சங்க இலக்கியம் - மதுரை - கோயில் கலாச்சாரம்

**ஆய்வின் வரலாற்றுப் பின்னணி மற்றும் அழகர் கோயிலின் தனித்துவம்:**

அழகர் கோயில், தென் தமிழகத்தின் மதுரைக்கு அருகில் அழகர் மலையில் அமைந்துள்ளது, இது பாண்டிய நாட்டின் கலாச்சார மற்றும் ஆன்மீக மையத்துடன் பல நூற்றாண்டுகளாகப் பிணைந்துள்ளது.1 இங்கு வீற்றிருக்கும் மூலவர், திரு சுந்தரராஜ பெருமாள், விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறார். இத்தலமானது வெறும் கோயில் என்ற நிலையில் நிற்காமல், தமிழ் மற்றும் வடமொழி இலக்கிய மரபுகளின் வரலாற்றுத் தொடர்ச்சியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களான பரிபாடல், சிலப்பதிகாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் மற்றும் சிற்றிலக்கியங்கள் வரை பல நூல்களில் இதன் பெருமை புகழப்பட்டுள்ளது.1 இக்கோயிலானது, பாரம்பரியத் தொன்மங்கள், ஆழ்ந்த தத்துவார்த்தக் குறிப்புகள் மற்றும் உயிரோட்டமான நாட்டுப்புறச் சடங்குகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை வெளிப்படுத்துவதால், ஒரு தனித்துவமான ஆய்வுப் பொருளாகிறது.

இவ் ஆய்வின் தேவை, அழகர் கோயில் குறித்த வடமொழிப் புராணங்கள், தமிழ் இலக்கியச் சான்றுகள் மற்றும் நாட்டுப்புற மரபுகள் ஆகிய பன்முகத் தரவுகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்துப் பகுப்பாய்வு செய்வதிலிருந்து எழுகிறது. இதன்மூலம், ஒரு குறிப்பிட்ட வழிபாட்டுத் தலத்தின் ஆன்மீக முக்கியத்துவம் எவ்வாறு கலாச்சார மரபுகள் மற்றும் சமூகத்தின் அன்றாட நம்பிக்கைகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டுப் பரிணாமம் பெறுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

**தொன்மையான இலக்கியச் சான்றுகளின் தேவை மற்றும் ஆய்வு முறை:**

அழகர் கோயிலின் ஆழமான வரலாற்றை அறிய, சங்க காலம் (பரிபாடல்) முதல் பக்தி இலக்கியம் மற்றும் பிற்காலச் சிற்றிலக்கியங்கள் வரை 1, காலவரிசைப்படி கோயிலின் தெய்விகப் பரிணாமத்தை ஆராய்வது அவசியமாகிறது. ஆய்வு அணுகுமுறையானது, ஒப்பீட்டுப் பகுப்பாய்வு (Comparative Analysis) என்ற முறையைப் பயன்படுத்துகிறது. அதாவது, இத்தலத்தைக் குறிக்கும் வடமொழிப் பெயர்களான விருஷபாத்ரி அல்லது கிரிராஜன் மலைக்கும், தமிழ்ப் பெயர்களான மாலிருங்குன்றம் அல்லது திருமாலிருஞ்சோலைக்கும் இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் ஆராய்ந்து, ஒரு பொதுவான பண்பாட்டு மற்றும் சமய மையத்தை நிறுவியது எப்படி என்று விளக்கப்படும். இந்த முறையானது, இலக்கியம், மதம் மற்றும் சமூகத்தின் இடையிலான உறவின் ஆழத்தை வெளிப்படுத்த உதவும்.

**அழகர் மலையின் தொன்மவியல் மற்றும் புராணவியல் வேர்கள் (Mythological and Puranic Roots)**

தென் தமிழகத்தில் அழகர் வீற்றிருக்கும் அழகர் மலை திருத்தலம் மிகவும் பழமையானது. இது எப்பொழுது தோன்றியது என்று சொல்ல முடியாத பழமை உடையது. மிகவும் தொன்மையான தமிழ் நூல்களிலும், வடமொழிப் புராணங்களிலும் இதன் பெருமை பேசப்பட்டிருக்கிறது. இங்குள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை பற்றி வராக புராணம், ஆக்நேய புராணம், பிரம்மாண்ட புராணம், வாமன புராணம் முதலியவற்றில் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. அவற்றைத் தொகுத்து ஒன்று சேர்த்து, 'விரு~பாத்திரி மகாத்மியம்' என்ற தலபுராணம் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது.

அழகர் எழுந்தருளியிருக்கும் மலை வால்மீகி ராமாயணம், வியாசர் எழுதிய மகாபாரதம், சுகரின் மகாபாகவதம் முதலிய வடமொழி இதிகாச புராணங்களில் போற்றப்படுகின்றது.

வால்மீகி முனிவர் ராமாயணத்தில், ராமரும், இலட்சுமணரும், சீதையும் சித்திரகூடமலையில் தங்கியிருந்த சந்தர்ப்பத்தை வர்ணிக்கும் போது, அம்மலையின் பெருமைக்கு அழகர் மலையைச் சுட்டி செல்கின்றார்.

"ஸ_பக : சித்ர கூட : அஸௌ
கிரிராஜ உபமோ கிரி:Æ
அஸ்மிந் வஸதி காகுத்ஸ்த :

யதத்யாஸ்தே மஹா தேஜா :Æ”

இப்பாடல் வரிகளில் சித்திர பர்வதத்துக்கு ஈடாக சொல்லக்கூடியது ‘கிரிராஜன் மலை’ என்கின்றார். இங்கு கிரிராஜன் என்று சொல்வது கைலாசத்தைக் குறிக்காது. இங்கு சிவ பார்வதியே வீற்றிருப்பர். எனவே திருமால் வீற்றிருக்கும் மலையினையே இது குறிக்கின்றது. திருவேங்கடமலையை எண்ணலாம் எனில் அதுவும் இயலாது. ஏன் எனில் அங்கு திருமால் சீதை மற்றும் இலக்குவனோடு காட்சி தரவில்லை. ஆதலால், ‘தென்னன் உயர் பொருப்பு’ என்று சொல்லக்கூடிய மலைகளுக்கு அரசனாகிய அழகர் மலையையே நாம் எண்ண வேண்டும். இங்கேயே திருமால் சுந்தரவல்லி தாயாருடனும், பலராமனுடனும் எழுந்தருளியுள்ளார்.(ஆதாரம் : அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு, கோயில் வெளியீடு)

மகாபாரதத்தில் வனபர்வதத்தில் தர்மபுத்திரர் அழகர்மலைக்கு யாத்திரையாக வந்தது வியாச முனிவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. புலஸ்தியர் நாரதருக்குச் சொன்ன தீர்;த்த வருணனையை நாரதர் பீ~;மருக்கு விரித்துரைத்த போது,

“ரு~பதம் பர்வதம் கத்வா
பாண்ட்யே~_ ந்ருப பூஜிதம்Æ
வாஜபேயம் அவாப்நோதி
நாக ப்ரு~;டே சமோததேÆÆ” (வனபர் 83-21)

அழகர் மலையை விரு~ப பர்வதம் என்றும் பாண்டிய தேசத்தில் உள்ளதென்றும் கூறுகின்றார். இதன் பொருள் ‘ஒருவன் பாண்டிய நாட்டில் அரசர்களால் பூசிக்கப் பெற்ற ரிஷப மலையை அடைந்தால் வாஜபேய யாக பலனை அடைகின்றான். தேவலோகத்திலும் மகிழ்கின்றான்’ என்பதாகும்.

பாகவதத்தில் பலராமர் தீர்த்தயாத்திரை செய்த போது விரு~பாத்திரி (அழகர் மலை) அடைந்து பிறகு சேதுவில் கடலாடச் சென்றதாக சுகர் குறிப்பிடுகின்றார்.

“விருஷபாத்ரிம் ஹரே:NÑத்ரம் தÑணாம் மதுராம் ததாÆ
ஸாமுத்ரம் ஸேதும் அகமத் மஹா பாதக நாசணம்” (பாகவதம் 79-15)

என்ற குறிப்பு அதில் காணப்படுகின்றது.

பரிபாடலின் 15ஆவது பாடலில் 66 வரிகளில் இதனைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. பரிபாடலில் இம்மலையை ‘மாலிருங்குன்றம்’ என்று இளம்பெருவழுதியார் சுட்டுகின்றார். இன்றும் இப்பெயரால் இம்மலை வழங்கப்படுகின்றது. மேலும், இழகர்கோயிலில் வீற்றிருக்கும் திருமாலின் தோற்றத்தைப் பின்வரும் பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

“கள்ளணி பசுந்துளவினவை கருங்குன்று அனையவை
ஒள்ளொளியவை ஒரு குழையவை
புள்ளணி பொலங் கொடியவை
வள்ளணி வளைநாஞ்விலவை
சலம்புரி தண்டு ஏந்தினவை
வலம்புரி வய நேமியவை
வரிசிலை வய அம்பினவை

புகர் இணர் சூழ் வட்டத்தவை
புகர் வாளவை:
எனவாங்கு, நலம்புரீஇ
அஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென உரைத்தலினெம்
உள்ளமர்ந்து இசைத்திறை
இருங்குன்றத்து அடியுறை
இயைகெனப்
பெரும்பெயர் இருவரைப் பரவுதும்
தொழுதே" (பரிபாடல் 55-66)

மேலும், கடலும் கானலும் போன்றும், சொல்லும் பொருளும் போன்றும் பிரியாது விளங்கும் கண்ணனும், அவனது தமையனான பலராமனும் கோயில் கொண்டிருந்தனர் என்றும் இப்பாடலில் குறிப்பிடுகின்றார். சங்க காலத்தில் பலராமனும் திருமாலும் ஒன்றாகவே வணங்கப்பட்டு வந்தனர் என்ற செய்தி இதிலும் புலப்படுகின்றது. பின்னர் காலப்போக்கில் பலராமன் வழிபாடு சமூகத்தில் வழக்கொழிந்த காலகட்டத்தில் இங்கும் பலராமன் வழிபாடு வழக்கொழிந்து, திருமால் வழிபாடு மட்டும் நிலைத்து இருந்து வருகின்றது.

சங்க காலத்திற்கு பிற்பட்ட சிலப்பதிகாரத்திலும் அழகர் கோயில் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இம்மலையின் அமைவிடத்தை, சோழர் தலைநகரான உறையூரிலிருந்து பாண்டியநாட்டின் தலைநகரான மதுரைக்குச் செல்லும் வழியில் ஒரு வழியில் அமைந்திருப்பதாகக் குறிப்பிடுகின்றது. திருமாலிருஞ்சோலையில் வீற்றிருக்கும் திருமாலைத் தரிசித்து விட்டு திருவரங்கத்திற்குச் செல்லும் அந்தணன் ஒருவன் மதுரைக்கு வந்து கொண்டிருக்கும் கோவலன், கண்ணகி மற்றும் கவுந்தியடிகளிடம் இம்மலையின் பெருமைகளைச் சொல்வதாக இம்மலையினைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

"அவ்வழிப் படரீர் ஆயின் இடத்து
செவ்வழிப் பண்ணின் சிறை
வண்டு அரற்றும்
தடம் தாழ் வயலொடு தண்பூங்
காவொடு
கடம் பலகிடந்த காடுடன் கழிந்து,
திருமால்குன்றத்துச் செல்குவிர்
ஆயின்....."(சிலப்பதிகாரம்)

என்று தொடங்கும் பாடல் வரிகளில் திருமாலிருஞ்சோலையின் அறிமுகம் தொடங்குகின்றது. 'திருமால் வீற்றிருக்கும் குன்றினை இடப்பக்கமாகச் சென்றால் அடையலாம். அங்கு சுரங்க வழி ஒன்று இருக்கின்றது. அவ்வழியில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை புண்ணிய சிரவணம், பவஹாரிணி,

இஷ்ட சித்தி என்பன. புண்ணிய சிரவணத்தில் நீராடினால் இந்திரனால் எழுதப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் இலக்கண நூலறிவை நீங்கள் பெறலாம். பவஹாரிணியில் மூழ்கினால் பழம் பிறப்பைப் பற்றிய அறிவு உண்டாகும். இட்டசி;த்தியில் நீராடினால் நினைத்தவையெல்லாம் கைகூடும். இச்சுரங்க வழியில் நீங்கள் செல்ல விரும்பி, இப்பயன்களை மனம், மெய், மொழி ஆகிய மூன்றாலும் தொழுது அம்மலைரைய மும்முறை வலமாக வரவேண்டும். பிறகு அம்மலையில் உள்ள சிலம்பாற்றின் கரையில் வரோத்தமை என்ற ஒரு பெண் தெய்வம் உங்கள் முன் தோன்றி, இம்மைக்கும் மறுமைக்கும், எக்காலத்துக்கும் பேரின்பம் தருவது யாது என வினவுவாள்? அவ்வினாவிற்கு நீங்கள் விடையளித்தால் அத்தெய்வம் உங்களுக்கு சுரங்க வாயிலைத் திறந்து விடும். பிறகு அதன் வழியே சென்றால் மற்றொரு இரட்டைக் கதவுடைய வாயில் காணப்படும். அதனைக் கடந்து சென்றதும் மற்றொரு தெய்வம் வந்து, அழியாத இன்பம் எது? என்று கேட்கும். அதற்குரிய விடையை நீங்கள் அளித்தால், அவள் தானே உங்களை மேற்கூறிய மூன்று பொய்கைகளுக்கும் அழைத்துச் செல்வாள். பிறகு வேத மந்திரங்களாகிய பஞ்வசாட்சரம், அ~;டாட்சரம் என்னும் இரண்டில் ஒன்றை ஓதி, அப்பெய்கைகளில் மூழ்கினால் தவம் செய்தவர்களுக்கும் கிடைக்காத பலன்கள் உங்களுக்கு கிட்டும். அவற்றை நீங்கள் விரும்பவில்லையானால், அத்திருமலை மீது நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியுள்ள திருமாலின் திருவடிகளைத் தியானியுங்கள். அப்பொழுது அவரது கருடக்கொடி கட்டிய கொடிமரம் உங்கள் கண்முன் தோன்றும், அவ்வளவில் உங்கள் பிறவித்துன்பம் ஓடும். பிறகு நீங்கள் பரமபதம் அடைதல் உறுதி' என்று அவ்வைணவன் அவர்களுக்குக் குறிப்பிடுவதாய் அமைந்துள்ளது.

இவ்வாறு வைணவ சமயத்தில் பற்றுள்ள அந்தணண் தன் சமயப் பெருமையைப் புலப்படுத்துவதாய் இவ்வரிகள் அமைகின்றன. இதில் திருமாலிருஞ்சோலையின் பெருமையும், திரமாலின் பெருமையும் சுட்டப்பட்டுள்ளது. ஆனால் இதில் குறிப்பிடப்படும் மூன்று தீர்த்தங்களும் எது என்று தெரிவதற்கில்லை. சிலம்பாறு என்ற புண்ணியநதி மட்டுமே இன்று காணப்படுகின்றது.

இதனையடுத்து பின்வரும் பக்தி இலக்கிய காலகட்டத்தில் ஆழ்வார்கள் இத்திருமாலிருஞ்சோலையைத் தம் பாடல்களில் பாடியுள்ளனர். ஆழ்வார்கள் பல நூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள். இவ்வாலழ்வார்கள் காலத்திலும் இம்மலை சிறப்பிடம் பெற்று திகழ்ந்துள்ளது. இதனை அக்காலத்தில் ஆழ்வார்கள் தென்திருப்பதி என்று அழைத்து வந்துள்ளனர். திருhமல் பள்ளி கொண்டுள்ள பாற்கடல் போன்று இது புனிதமானது என்று போற்றப்படுகின்றது. மேலும் எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது போன்று, அனைத்து திவ்ய தேசங்களுக்கும் இதுவே பிரதான தலம் என்று ஆழ்வார்கள் வாழ்த்தி வணங்கியிருக்கின்றனர். ஆழ்வார்கள் பன்னிருவரில் அறுவர் இம்மலைக்கு மங்களாசாளசனம் செய்திருக்கிறார்கள். அழகரைப் பற்றியும் 108 பாசுரங்களில் பாடியிருக்கின்றனர்.

1. பெரியாழ்வார் - 4 பாடல்கள்
2. ஆண்டாள் - 11 பாடல்கள்
3. பேயாழ்வார் - 1 பாடல்
4. திருமங்கையாழ்வார் - 33 பாடல்கள்
5. பூதத்தாழ்வார் - 3 பாடல்கள்

6. நம்மாழ்வார் - 36 பாடல்கள்

இவையனைத்தும் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் காணப்படுகின்றன.

இந்த மலையில் ஆண்டாளுக்கு சிறப்பான ஆராதனைகளும் திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. இதற்கு காரணம் ஆண்டாள் தன் தந்தையாகிய அழகரைத் திருமணமும் செய்து கொண்டார் என்பதுமேயாகும். இம்மலையின் பெருமையையும் அழகையும் பெரியாழ்வாரே ஆண்டாளுக்கு நேரில் சொன்னதாக குறிப்புகள் காணப்படுகின்றது.

“சிலம்பார்க்க வந்து தெய்வமகளிர்களாடும் சீர்
சிலம்பாறு பாயும் தென்திரு மாலிருஞ்சோலையே”
“எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண் டொலி
சொல்லா நிற்கும் சீர்த்தென்திரு மாலிருஞ்சோலையே”
“ஆனந்தமென்று அமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென்திரு மாலிருஞ்சோலையே”
“குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திரு மாலிருஞ்சோலையே”

என்று பலவாறாகப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

இரங்கநாதரைக் கணவராக அடைய வேண்டி பிராத்தனை செய்த ஆண்டாள் நூறு அண்டாவில் ‘அக்கார அடிசி;ல்’ செய்க படையல் படைப்பதாக வேண்டிக் கொண்டாராம். இந்த வேண்டுதல் செய்து ஒரு மண்டலம் முடியும் முன்பு ரங்கநாதருடன் ஐக்கியமாகி விடுகிறார். அதனால் சொல்லியபடி படையலைச் செலுத்த முடியவில்லை என கூறப்படுகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்னர் இதனைக் கேள்விப்பட்ட இராமானுஜர் ஆண்டாளின் நேர்த்திக்கடனை செலுத்தியதாக புராணங்கள் கூறுகின்றன.

ஆண்டாளும் திருமாலிருஞ்சோலையில் உள்ள இயற்கை வளங்களில் எல்லாம் திருமாலைக் கண்டு தன் மனதைப் பறிகொடுத்ததைப் பின்வரும் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

“கருவிளை யொண்மலர்கள் காயா மலர்காள் திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்கு உய்வழக் கொன்று உரையீர்”
“துங்கமலர்ப் பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்கள் தொகுபூஞ்சுனைகாள் சுனையில்
தங்கு செந்தாமரைகாள் எனக்கு ஓர் சரண் சாற்றுமினே”

இவ்வாறு பல பாடல்களில் திருமாலை எண்ணி மனமுருகிப் பாடியுள்ளார். இவ்வாறே பிற ஆழ்வார்களும் பல பாடல்களில் திருமாலிருஞ்சோலை குறித்தும், திருமால் குறித்தும் பாடியுள்ளனர்.

பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து எழுந்த சிற்றிலக்கியங்கள் பலவற்றிலும் திருமாலிருஞ்சோலை குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன. அழகர் கிள்ளை விடு தூது அதில் சிறப்பிடம் பெறக்கூடியது. பின்வரும் இலக்கியங்கள் அழகர் கோயில் குறித்து எழுதப்பட்டவை என தொ.பரமசிவன் தனது இலக்கியங்களில் அழகர்கோயில் எனும் நூலில் குறிப்பிட்டிருப்பார்.

1. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அழகர் அந்தாதி
2. வேம்பத்தூர் கவிகுஞ்சரமையர் அழகர் கலம்பகம்
3. பலபட்டடைச் சொக்கநாத புலவர் அழகர் கிள்ளை விடு தூது
4. வேம்பத்தூர் சாமி கவிகாளருத்திரன் அழகர் பிள்ளைத்தமிழ்
5. பெருங்கரை கவிகுஞ்சர பாரதி அழகர் குறவஞ்சி
6. கிருஷ்ணையங்கார் சோலைமலைக் குறவஞ்சி
7. நெற்குப்பை பைரவையர் திருமாலிருஞ்சோலை பிள்ளைத்தமிழ்
8. மதுரகவி சீனிவாச ஐயங்கார் அலங்காhரர் மாலை

மேலும் அழகர் வருகைப் பத்து, திருமாலிருஞ்சோலைமலை அழகர்மாலை, அழகர் அகவல், அழகம்பெருமாள் வண்ணம் போன்ற ஆசிரியர் பெயர் அறியப்படாத நூல்களும் அழகர்கோயில் குறித்து காணப்படுகின்றன என்று அவ்வாசிரியர் குறிப்பிடுகின்றார். மேலும் அருணகிரிநாதரும் தம் திருப்புகழில்,

"ஆயிர முகங்கள் கொண்ட நூபுர மிரங்கு கங்கை
ஆறமர லந்தலம்பு துறை சேர
சோதியின் மிகுந்த செம்பொன்
மாளிகை விளங்குகின்ற
சோலைமலை வந்துகந்த பெருமாளே"

என்று அழகர் மலையில் வீற்றிருக்கும் திருமால் குறித்து பாடுகின்றார்.

இவை போக ஏட்டில் எழுதா இலக்கியங்கள் பலவற்றில் திருமாலிருஞ்சோலை அழகர் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. அழகர்கோயில் திருவிழாவின் பொழுது, அழகரை வர்ணிக்கும் பாடல்கள் பல காணப்படுகின்றன. அழகர் வர்ணிப்பு, இராக்காயி வர்ணிப்பு, கிருஷ்ணவதார வர்ணிப்பு, கள்ளழகர் வர்ணிப்பு, போன்று பல நாட்டுப்புறப் பாடல் வகைகள் காணப்படுகின்றன.

## முடிவுரை மற்றும் ஆய்வுப் பரிந்துரைகள் (Conclusion and Recommendations)

அழகர் கோயில், தொன்மை, இலக்கிய மரபு, பக்தி இயக்கம் மற்றும் சமூக மரபுகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, தென் தமிழகத்தின் நீடித்த கலாச்சார மையமாக விளங்குவதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது. வடமொழிப் புராணங்கள் இத்தலத்தை ரிஷப பர்வதம் எனக் குறிப்பிட்டு, அதன் அகில இந்தியத் தொன்மையை நிறுவுகின்றன. அதே நேரத்தில் தமிழ் இலக்கியங்கள் அதனை மாலிருங்குன்றம் எனப் போற்றி, திருமால்-பலராமன் இணை வழிபாட்டில் வேரூன்றிய அதன் ஆதித் தன்மையை வெளிப்படுத்துகின்றன. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் சுரங்க வழி மற்றும் தீர்த்தங்கள், இத்தலத்தின் ஞான மார்க்கத்தின் ஆழத்தைக் காட்டுகின்றன. ஆழ்வார்களால் 'தென்திருப்பதி' என வழங்கப்பட்ட அந்தஸ்து, வைணவத் தத்துவத்தில் அழகரின் முக்கியத்துவத்தை உச்சத்திற்குக் கொண்டு சென்றது. கள்ளழகர் திருவிழாச் சடங்குகளும், பட்டுடை பலன்களும், அழகர் வழிபாட்டைச் சமூகத்தின் வேளாண் பொருளாதார வாழ்வுடன் இரண்டறக் கலந்த ஒரு உயிருள்ள மரபாக மாற்றியமைக்கின்றன.

அழகர் கோயிலின் நிர்வாகம், நிதி மற்றும் சமூகப் பங்களிப்பு ஆகியவை குறித்து, குறிப்பாகப் பிற்காலப் பாண்டியர் மற்றும் நாயக்கர் காலத்திய கல்வெட்டுச் சான்றுகள் அடிப்படையில் மேலும் ஆழமான வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், நாட்டுப்புறப் பாடல்களான வர்ணிப்புகளின் (இராக்காயி, கள்ளழகர்) முழுமையான தொகுப்பு மற்றும் சமூக மானிடவியல் ஆய்வு, உள்ளூர் மரபைப் பற்றி மேலும் நுண்ணறிவை வழங்கக்கூடும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

**பார்வை நூல்கள் (References)**


1. ஆழ்வார்கள் ஆய்வு மையம். நாலாயிர திவ்யப்பிரபந்தம். சென்னை. [1]
2. கோயில் வெளியீடு. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் வரலாறு. [1]
3. புலியூர் கேசிகன் (உரைஆசிரியர்). சிலப்பதிகாரம். செண்பகா பதிப்பகம், சென்னை. [1]
4. பாரதி பதிப்பகம். பரிபாடல். திருமகள் நிலையம், சென்னை. [1]
5. Pranav Journals. சங்க இலக்கியங்களில் திருமால் வழிபாடு. [6]
6. புதிய தலைமுறை. மதுரை கள்ளழகர் திருவிழா வரலாற்றுச் சிறப்பு. [5]
7. வலைத்தமிழ். வைகை ஆறு அழகர் கோயில் தொடர்பு ஆய்வு. [2]
8. புதிய தலைமுறை. கள்ளழகர் பட்டு நிறம் பலன். [3]
9. One India. கள்ளழகர் உடுத்தி வரும் பட்டுப்புடவை நிறத்தின் அர்த்தம். [4]


**Works cited**


1. இலக்கியங்களில் அழகர் கோயில்.docx
2. Kallalagar in Madurai Vaigai River - History | கள்ளழகர் வைகை ..., accessed November 9, 2025, https://www.valaitamil.com/reason-for-kallalagar-in-vaigai_12555.html
3. அழகர் பட்டு - என்ன நிறத்திற்கு என்ன பலன் ? - YouTube, accessed November 9, 2025, https://www.youtube.com/watch?v=RWX29e3jK8o
4. பச்சை மஞ்சள் சிவப்பு... கள்ளழகர் உடுத்தி வரும் பட்டுப்புடவை நிறத்தின் அர்த்தம் தெரியுமா | Green Yellow Red ... Do you know what it means to Kallazhagar wear silk saree colour - Oneindia Tamil, accessed November 9, 2025, https://tamil.oneindia.com/astrology/news/green-yellow-red-do-you-know-what-it-means-to-kallazhagar-wear-silk-saree-colour-419019.html
5. கள்ளழகர் கோயில் வரலாறு | Madurai azhagar temple s ..., accessed November 9, 2025, https://www.puthiyathalaimurai.com/spiritual/story/madurai-azhagar-temple-s-purana-history


**குறிப்புதவி நூல்கள்**


1. சிலப்பதிகாரம் – புலியூர் கேசிகன் (உரைஆசிரியர்) – செண்பகா பதிப்பகம், சென்னை
2. நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை.
3. பரிபாடல் – பாரதி பதிப்பகம், திருமகள் நிலையம், சென்னை



**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.